1994 ஏப்ரல் 18]

படுத்துகிற வகையில் அவருடைய சொந்த மாவட்டத்தில் அவருடைய சொந்த ஊரிலே ஒரு மணிமண்டபம், ரூபாய் 55 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே சிலையும் அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 295, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

295–

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காக ஒருங்கிணைப்புக் குழு அமைத்தல்.

***22169–டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய அத்தியாவசியமான தேவைகளை நிறைவேற்றும்வகையில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து ஒருங்கிணைப்புக் குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய அடிப்படைத் தேவைகளையும் அவர்களுடைய நிதிச் சலுகைகளையும் அவ்வப்போது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான அதிகாரிகள் சரிவரச் செய்கிறார்களா, தொழிலாளர் நலத்துறை அவ்வப்போது அவர்களுடைய பணியை மேற்பார்வை செய்கிறதா, அப்படிச் செய்கிறபோது சிறப்பாகப் பணியாற்றுகிற தொழிலாளர்கள், ஆய்வாளர்கள் போன்ற அதிகாரிகளுக்குப் பாராட்டுக்கள் வழங்கப்படுகின்றனவா, சரியாகப் பணியாற்றாமல் இருக்கக்கூடிய அதிகாரிகள் குறித்து பொது மக்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பிரச்சினையைக் கொண்டு வந்தால் நன்கு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக 10, 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட சட்டங்களைப் பொறுத்தவரையில், தற்போது வளர்ந்துவரும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமைகள், மாற்றங்கள் ஆகியவற்றிற்கேற்ப அதில் சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்து அவற்றை இந்த அவையிலே நிறைவேற்றுகிற வகையில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களின் பணி மற்றும் நிலைமைகளைக் கவனிப்பதற்கென்று, 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் தோட்ட நிறுவன ஆய்வாளர்களால் அமல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா ; அது எப்போது உருவாக்கப்பட்டது ; அதற்கு உண்டான கூலி சரியாகக் கொடுக்கப்படுகிறதா ; சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 296, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

296--

கொடுமுடி ஒன்றியத்தில் சாலைப் புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

***19505–திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--